தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
**Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723**
[Impact Factor: 9.47] Monthly, Peer-Reviewed, Refereed, Indexed Journal with IC Value : 86.87
**Volume - 1, Issue - 10, July - 2025**

DOIs: https://doi.org/10.63300/tm0109202504 --:-- Research Paper

# The Religious Perspectives in Devotional Literature

**Dr.V.GAYATHRI PRIYADARSINI,**
Assstant Professor, Department of Tamil, G.T.N. Arts College, Dindigul
Email: priyadarsini1983@gmail.com ORCID: https://orcid.org/0000-0002-6968-2084

***Abstract:*** *Literature is a reflection of its times. Social motivations are the reason for the formation of literature, which mirrors the political and social situations of each period. Thus, religion and devotion, which were part of literature, later developed into separate literary genres. Although literature centered on devotion has emerged periodically, the Bhakti movement—a distinct movement based on the principle of devotion—grew to the extent of creating a separate period for itself in the history of literature, though it was primarily in the Tamil region. Strong social and political factors underpinned the emergence of devotional literature, which functioned as a Bhakti movement. The basic objective of this movement was to protect traditional religion from other religious influences. There was a need to restore the traditional beliefs, worship methods, arts, culture, and values of the Tamil land. Both Saiva and Vaishnava followers participated in this restoration effort. Initially, Saivas and Vaishnavites emphasized many principles that Jainism and Buddhism rejected. This characteristic can be seen in the Azhwar Nayanmars of the first period of the Bhakti movement. They attempted to unite Saivaism and Vaishnavism without directly opposing Jainism and Buddhism, viewing Shiva and Thirumal as one entity. In an era of philosophical conflict, ideological opposition, and religious confusion, the adherents of the Vedic religion made efforts to unite among themselves.*

***Key Words:*** *Religious generality, foreign influence, Vedas, Bhakti movement, opposition to foreign religions, Azhwars, Nayanmars, religious education.*

# பக்தி இலக்கியத்தில் சமயப் பொதுநோக்கு

**முனைவர் வி.காயத்ரி பிரியதர்ஷினி ,**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,*
*ஜி.டி.என்.கலைக்கல்லூரி, திண்டுக்கல்.*
Email: priyadarsini1983@gmail.com ORCID: https://orcid.org/0000-0002-6968-2084

***Abstract:*** *இலக்கியங்கள் காலத்தின் பிரதிபலிப்பு. சமூக உந்துதல்களே இலக்கியங்கள் உருவாவதற்குக் காரணமாக இருக்கின்றன. இலக்கியங்கள் ஒவ்வொரு காலக்கட்டத்தின் அரசியல்,சமூக நிலையைப் பிரதிபலிக்கின்றன. அவ்வகையில் இலக்கியத்தின் ஒரு கூறாக இருந்த சமயம், பக்தி போன்றவை பிற்காலத்தில் தனி இலக்கிய வகைமையாக வளரந்தது. காலந்தோறும் பக்தியை மையப்படுத்திய இலக்கியங்கள் தோன்றியிருப்பினும் பக்தி நெறியை அடிப்படையாகக் கொண்ட பக்தி இயக்கம் என்ற தனி இயக்கம் இலக்கிய வரலாற்றில் தனக்கெனத் தனி காலக்கட்டத்தை ஏற்படுத்திக் கொள்ளுமளவிற்கு அது ஓங்கி வளர்ந்ததெனின் அது தமிழ்நிலப்பகுதியில் மட்டுமே. பக்தி இலக்கியத் தோற்றப் பின்னணியில் வலுவான சமூக,அரசியல் காரணிகள் அடித்தளமாக இருந்தன. பக்தி இயக்கமாகவே இது செயல்பட்டது. இவ்வியக்கத்தின் அடிப்படை நோக்கம் புறச்சமயத்தாக்கத்திலிருந்து பாரம்பரிய சமயத்தைக் காத்தல். தமிழ் மண்ணின் பாரம்பரிய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், கலைகள், பண்பாடு, விழுமியங்கள் ஆகியவற்றை மீட்டெடுத்தல். இம்மீட்டெடுக்கும் முயற்சியில் சைவ அடியவர்களும், வைணவ அடியவர்களும் ஈடுபட்டனர். புறச்சமயத் தாக்குதல் என்பது நேரிடையாகவும் மறைமுகமாகவும் நடைபெற்றது. முதலாவதாக, சமணம், பௌத்தம் மறுதலித்த பல கொள்கைளை சைவ, வைணவத்தார் வலியுறுத்தினர். இத்தன்மையைப் பக்தி இயக்கத்தின் முதலாம் காலக்கட்டத்தைச் சார்ந்த ஆழ்வார் நாயன்மார்கள் சமணத்தையும் பௌத்தத்தையும் நேரிடையாக எதிர்க்காமல் சைவத்தையும் வைணவத்தையும் ஒன்றாக இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். சிவனையும்*

*திருமாலையும் ஓர் உருவாய்க் கண்டனர். தத்துவப் போராட்டமும், கருத்தியல் எதிர்ப்பும், சமயப்பூசலும் நிலவிய காலத்தில் புறச்சமய எதிர்ப்பை முன்வைக்காமல் வைதீகச் சமயத்தினர் தங்களுக்குள் ஓர் ஒருங்கிணைப்பை ஏற்படுத்த முயன்றனர்.*

***குறிப்பு சொற்கள்*** *: சமயப்பொதுமை, புறச்சமயத்தாக்கம், வைதீகம், பக்தி இயக்கம், புறச்சமய எதிர்ப்பு, ஆழ்வார்கள், நாயன்மார்கள், சமயப்பொறை..*

## முன்னுரை:

தொன்றுதொட்டே இறைநம்பிக்கை மனித வாழ்வின் தவிர்க்க இயலாத அம்சமாகத் தொடர்ந்து வருகின்றது. சமயங்கள் தோன்றுவதற்கு முன்பே இறை நம்பிக்கையும், வழிபாட்டு நெறிகளும், இறைவனைப் பற்றிய கோட்பாடுகளும் இருந்தன. தமிழகத்தைப் பொறுத்தவரை சமயம் தொடர்பான வரலாற்றை அறிவதற்கான மிகப்பெரிய வரலாற்று ஆவணமாக இலக்கியங்கள் திகழ்கின்றன. இதில் சமயம், சமயம் சார்ந்த சடங்குகள் மற்றும் நம்பிக்கைகளும் அடங்கும். சங்க இலக்கியங்கள் பலவற்றில் இயற்கையைத் தெய்வமாக வழிபட்ட மரபினைக் காணமுடிகின்றது. பின்னர் ஏற்பட்ட காலமாற்றம், சமூகமாற்றம், அரசியல் மாற்றம் என மாற்றத்தினூடே சமய மாற்றத்தையும் நோக்க வேண்டியுள்ளது. இதைத் தமிழ் இலக்கியங்கள் தெளிவுற எடுத்துக்காட்டுகின்றன. ஏனெனில் தமிழ் இலக்கியங்கள் உலகியல் வாழ்வை நோக்கியே படைக்கப்பட்டன. அகம், புறம் என்ற இருநிலைகளில் செயல்பட்ட இவ்விலக்கியங்களிலும் சமயம் ஒன்றிணைந்து செயல்பட்டு வந்தது. சங்கம் மருவிய காலத்தில் புறச்சமயத்தாக்கம் மிகுதியாக இருந்த காலக்கட்டம். அக்கால இலக்கியங்களில் அறத்தோடு சமயமும் இணைத்து வலியுறுத்தப்பட்டது. ஏனெனில் சமயங்கள் முன்னிறுத்திய அறங்களையே அவை மிகுதியாகப் போதித்தன. அவ்வாறு பெருஞ்சமயங்களாகத் தோன்றிய புதிய புறச்சமயங்களை ஏற்றல், எதிர்த்தல், என்ற முரண்கள் உருவாயின. அப்புறச்சமயத்திற்கு மாற்றாக வைதீகச் சமயங்கள் பெருஞ்சமயங்களாக, நிறுவனச் சமயங்களாக வளர்ச்சி பெற்றன. உள் முரண்பாடுகளைக் கொண்டிருந்தாலும் தங்களுக்குள் சமரசம் செய்துகொள்ள வேண்டிய தேவையும் ஏற்பட்டது. இவ்வாறு சமய முரண்களும் புறச்சமயத்தை எதிர்க்க வைதீகச் சமயங்களுக்குள் ஏற்பட்ட சமயப் பொதுமை போன்றவற்றை இலக்கியங்கள் வழி இக்கட்டுரை ஆராய்கின்றது.

**பண்டைய இலக்கியங்களில் இறைநெறி**

பண்டைத்தமிழரின் இறைநெறி என்பது தாம் வாழ்ந்த நிலப்பரப்பு, வாழ்க்கைச்சூழல், பண்பாடு, பழக்கவழக்கங்கள், இவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது. பல பயன் கருதியும் பாதுகாப்பு கருதியும் வழிபடப்பட்டன. அதன் வரலாற்றுத் தேடலின் முதல்படியாக முதலில் தொல்காப்பியத்தினின்று இறைநெறி பற்றிய ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது. இறைநெறி என்ற சிந்தனை தமிழ் மக்களிடத்தே எவ்வாறு இருந்தது என்பதை இவ்விலக்கண நூல் தெளிவுற எடுத்துக்காட்டுகின்றது. நானிலத்தெய்வம், பெண்தெய்வம், ஐம்பூத வழிபாடு, நடுகல் வழிபாடு, வழிபடு தெய்வங்கள் எனப்பிரித்து வழிபட்ட மரபை இதில் காணமுடிகின்றது. அகம், புறம் இரண்டிலும் சமயம் அதோடு தொடர்புடைய அத்துனைச் செயல்பாடுகளும் இதில் விளக்கமுற எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே" (தொல். - அகத்திணை இயல் - நூற்.**5).

பாட்டு, தொகை நூல்களில் குறிப்பாகப் பரிபாடல் அகப்புற நூல் என்ற வகைமைக்குள் சேர்க்கப்படினும் சமயம் சார்ந்த நூலாகவே பார்க்கப்படுகின்றது. திருமுருகாற்றுப்படை சமய நூல் என்றே கூறிவிட முடியும். அதுமட்டுமின்றி பிற நூல்களில் முருகன், திருமால், சிவன் (இப்பெயர்களால் இத்தெய்வங்களில் சில சங்க இலக்கியத்தில் குறிக்கப்படவில்லை), கொற்றவை, இந்திரன், திருமகள், வருணன், போன்ற தெய்வங்களையம் காவல் மரங்கள், முச்சுடராகக் கருதப்பட்ட கொடிநிலை, கந்தழி, வள்ளி, நடுகல், கந்துடைத்தெய்வம், கடற்தெய்வம், வெறியாட்டு போன்ற நிலம் சார்ந்தும், பண்பாடு சார்ந்தும் வழிபடப்பட்ட

மரபைச் சங்க நூல்களில் காணமுடிகின்றது. குறிப்பாக இறையனார் களவியல் உரையில் கடவுளர் சங்கத்தில் வீற்றிருந்தனர் என்ற செய்தி இடம்பெறுகின்றது. இது இலக்கியத்திற்குத் தெய்வீகத்தன்மை ஏற்றும் சிந்தனை வெளிப்பாடா? அல்லது இலக்கியத்தையும் இறைவனையும் இணைக்கும் முயற்சியா? என்பதும் கவனிக்கத்தக்கது. பிற்காலத்தில் சேர்க்கப்பட்டது என்று கருதப்படுகின்ற பெருந்தேவனாரின் கடவுள் வாழ்த்துப்பாடல்களும் இறைமைக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் என்றே கருதலாம்.

**"சங்கத் தமிழர்களின் காலக்கட்டம் என்பது அரசியல், பொருளியல் ரீதியில் வேறுபாடுகளை உள்ளடக்கிய ஏற்றத்தாழ்வான சமூக அமைப்பு ஆகும். இதனால்தான் ஒரு குறிப்பிட்ட கடவுள் அல்லது தெய்வத்தை முன்னிறுத்திய ஒற்றைத்தன்மையைக் கண்டறிய முடியவில்லை. தொல் சமயம், வைதீகச் சமயம், பௌத்த சமயம், ஜைன சமயம் ஆகிய சமயங்கள், சமச்சீரற்ற நிலையில் தமிழர் வாழ்க்கையில் பரவி இருந்த நிலையைச் சங்கப் பாடல்கள் வெளிப்படுத்தியுள்ளன. இனக்குழு வாழ்க்கையின் எச்சங்கள் நிரம்பியிருந்த சங்க காலத்தில் தமிழரின் சமயமானது, ஒப்பீட்டு நிலையில் பெரிதும் தொல் சமயத் தன்மையுடையதாக விளங்கியது" (ந.முருகேச பாண்டியன், சங்கத் தமிழரின் சமயம்,ப.30).**

ஒற்றைச் சமயக் கொள்கையன்றித் தமிழ்ச்சமூகம் இருந்தது என்பதற்குப் பின்வரும் புறநானூற்றின் 56ஆம் பாடல் சான்றாகும். பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை நக்கீரர் பாடிய பாடலில் சிவன், திருமால் முருகன், பலதேவன், எமன் எனக் கடவுளர் பலர் பாடப்பட்டுள்ளனர்.

**"ஏற்று வலன் உயரிய எரி மருள் அவிர் சடை,**
**மாற்று அருங் கணிச்சி, மணி மிடற்றோனும்;**
**கடல் வளர் புரி வளை புரையும் மேனி,**
**அடல் வெந் நாஞ்சில், பனைக் கொடியோனும்;**
**மண்ணுறு திரு மணி புரையும் மேனி,**
**விண் உயர் புள் கொடி, விறல் வெய்யோனும்,**
**மணி மயில் உயரிய மாறா வென்றி,**
**பிணிமுக ஊர்தி, ஒண் செய்யோனும் என**
**ஞாலம் காக்கும் கால முன்பின்,**
**தோலா நல் இசை, நால்வருள்ளும், "(நக்கீர், புறம்.56).**

திருமுருகாற்றுப்படை முருகனின் அருள்வேட்டலாகப் படைக்கப்பட்ட நூல், இதில் வைணவக் கடவுளான திருமால் குறித்த செய்திகளும் இடம்பெறுகின்றன.

**"பாம்பு படப்புடைக்கும் பல்வர்க்**
**கொடுஞ்சிறைப்**
**புல் அணி நீள் கொடிச் செல்வன்" (நக்கீரர் -திருமுருகாற்றுப்படை -175-178).**

சைவம், வைணவம் என்பதைத் தாண்டி பௌத்தப்பள்ளிகளும், சமணப்பள்ளிகளும் சமயப்பணியாற்றிய திறத்தைப் பட்டினப்பாலையும், மதுரைக்காஞ்சியும் எடுத்துக்காட்டுகின்றன.

**"வண்டுபடப் பழுநிய தேன்ஆர் தோற்றத்துப்**
**பூவும் புகையும் சாவகர்ப் பழிச்ச**
**சென்ற காலமும் வரூஉம் அமயமும்"** (மாங்குடி மருதனார்- மதுரைக்காஞ்சி- 475-477)
**"……….. பேரிளம் பெண்டிர்**
**பூவினர்க் கையினர் தொழுவனர்ப் பழிச்சிச்**
**சிறந்து புறங்காக்குங் கடவுட்பள்ளியும் "** (மாங்குடி மருதனார்- மதுரைக்காஞ்சி- 464-466).

முற்று முழுதான சமயப்பொறை பண்டைக்காலத்தில் இருந்தது என்று கூறிவிட இயலாது. சமயப்பொதுமை மட்டுமின்றி சமய முரண்பாடும் இருந்தது என்பதற்குக் கீழ்வரும் ஆவுர் மூலங்கிழாரின் பாடல் சான்று பகரும்.

**"ஆறுணர்ந்த ஒருமுதுநூல்**
**இகல்கண்டோர் மிகல்சாய்மார்**
**மெய்அன்ன பொய்உணர்ந்து**
**பொய்ஓராது மெய்கொளீஇ**
**மூவேழ்த் துறையும் முட்டின்று போகிய**
**உரைசால் சிறப்பின் உரவோர் மருக!" (புறம்.- 166).**

அறங்காத்தலும் உணரப்பட்ட ஒரு பழைய நூலாகிய வேதத்திற்கு மாறுபட்ட நூல்களைக் கண்டோராகிய புத்தர் முதலான புறச்சமயத்தோரது மிகுதியைச் சாய்க்க வேண்டி அவரது மெய்போன்ற பொய்யை உளப்பட அறிந்து அப்பொய்யை மெய்யென்று கருதாமல் உண்மைப்பொருளை அவர்களுக்கு ஏற்பச் சொல்லி.....
என்பதில் பிற சமய எதிர்ப்பு ஆங்காங்கே இருந்ததை அறியமுடிகின்றது.

**புறச்சமய எதிர்ப்பு**

சங்ககாலத்தில் பெருமளவில் இல்லாத சமயப் போட்டிகள் சங்கம் மருவிய காலத்தில் தலைதூக்கத் தொடங்கியது. அதற்குப் பின்னணியில் சமூக, அரசியல் காரணிகள் இருந்தன. இனக்குழுச் சமயங்கள் வலுவிழந்து பெருஞ்சமயங்களாகச் சைவம், வைணவம் உருவெடுத்திருந்தன. தமிழ்ச் சமயங்கள் பல வைதீகச் சமய நெறிக்கு ஆட்பட்டன. சங்ககாலத்தை அடுத்து சைவ, வைணவ சமயங்களோடு சமணம், பௌத்தம், ஆசீவகம் வளர்ச்சி பெற்ற சமயங்களாய் மாறின. சங்ககால இறைநெறி இவ்வுலகை நோக்கியிருந்தது. பௌத்த, சமண பக்திநெறி மறுமை நோக்கியிருந்தது. மனித வாழ்வின் நன்மை, தீமைகளுக்கு அவர்களின் வினைப்பயனைக் காரணம் காட்டினர். இதுவரை தமிழ்ச் சமூகம் கண்டிராத புதிய சமய நெறியை வலியுறுத்தினர். இக்காலக்கட்டம் தமிழகம் மிகப்பெரிய கருத்தியல் போராட்டத்தை எதிர்கொண்ட காலக்கட்டமாகும்.

> **"சங்ககாலம் முதல் தமிழ்மக்கள் பின்பற்றிவந்த இவ்வுலக நாட்டமும் இல்லற இன்பமும் கேலிக்கு உரியவை ஆயின.மனிதன் ஆள்வினையாலும் அயரா உழைப்பாலும் ஊக்கத்தாலும் அருஞ்சாதனைகள் ஆற்றமுடியும் என்ற கோட்பாட்டினைப் புறச்சமயத்தார் ஒப்பவில்லை. 'அளந்தன போகம் எல்லாம் அவரவர்க்கு அற்றை நாளே என்ற நியதிக் கோட்பாட்டில் உறுதி பூண்டிருந்தனர்" (சோ.ந.கந்தசாமி,உலகத்தமிழ் இலக்கிய வரலாறு,** ப.137).

சமணம் மற்றும் பௌத்த மதங்களின் அடிப்படைக் கருத்தியலான வினைக்கோட்பாடு மக்களின் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின. இம்மதங்கள் முன்வைத்த உலகியல் மறுப்பு நடைமுறை வாழ்வின் பிடிப்பற்ற தன்மையும் நம்பிக்கை இழப்பை ஏற்படுத்தக் கூடியதாய் அமைந்தன. இதை மயிலை சீனி வேங்கடசாமி பின்வருமாறு குறிப்பிடுவார்.

> **"கி.பி.5ஆம் நூற்றாண்டில் களப்பிர அரசக் காலத்திலே, பௌத்த,சமண சமயங்களுக்கு எதிர்ப்பாகவும், சைவ, வைணவ சமயங்களுக்குச் சார்பாகவும் ஒரு புதிய இயக்கம் தோன்றிற்று. அதுதான் பக்தி இயக்கம். புறப்பொருள் இலக்கியத்தை மாற்றியமைத்து, அதாவது, பகைவரைப் போரிலே கொன்று வெற்றிகொள்வதைவிட அகப் பகையை வென்று வெற்றி பெறுவது மேலானது என்னும் கொள்கையை அமைத்துப் பௌத்த சமண சமயங்கள் பிரச்சாரம் செய்ததுபோல, அகப்பொருளை மாற்றியமைத்துப் பக்தி இயக்கம் சைவ வைணவர்களால் உண்டாக்கப்பட்டது. இந்த இயக்கத்தின் கொள்கைப்படி, சிற்றின்பமாகிய அகப்பொருளுக்குப் பேரின்பமாகிய மோட்சம் கற்பிக்கப்பட்டது........ அகப்பொருளையே உயர்ந்த பொருளில் அமைத்து, மனித உயிரைத் தலைவியாகவும் கடவுளைத் தலைவனாகவும் அமைத்துப் பக்தி செய்து பேரின்ப மோட்சத்தை அடையக் கூடும் என்பதே பக்தி இயக்கத்தின் சாரம் ஆகும். இந்தப் பக்தி இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, ஆழ்வார்களும் நாயன்மார்களும் அகப்பொருள் துறையமையச் செய்யுள்களை இயற்றினார்கள்" (மயிலை சீனி வேங்கடசாமி, சமயங்கள் வளர்த்த தமிழ்,** பக்.11-12).

இக்காலக்கட்டம் பாரம்பரிய சமயங்களுக்கு எதிர்முனைத் தாக்குதலாக பௌத்த, சமண சமயங்கள் திகழ்ந்தன. இப்புறத்தாக்குதலினின்று தனக்கான நிலைப்பேற்றினை அடைய, தற்காத்துக்கொள்ள, எதிர்வினையாற்ற வைதீகச் சமயங்கள் முனைந்தன.

> **"சமண, பௌத்த மதங்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்ததே தமிழ்நாட்டுப் பக்திஇயக்கம். சைவமும் வைணவமுமே சமண, பௌத்த மதங்களை எதிர்த்தன. அவ்விரு மதங்களும் தங்களின் எழுச்சிக்கு ஒரு தமிழ் அடையாளத்தைத் தேடின. அவை சமண, பௌத்த மதங்களைத் தமிழ் அடையாளம் அற்றவை எனக் குற்றம் சாட்டின...... இந்திய இலக்கிய அரங்கில் தமிழ்நாட்டுப் பக்தி இயக்கமே தேசிய இனம் என்னும் பார்வையை முதலில் முன்வைத்தது"**(தொ.பரமசிவன், தமிழர் உறவு முறைகளும் சமயமும் வழிபாடும், ப.29).

இச்சமய முரண்பாடுகளினூடே தோன்றியதுதான் பக்தி இலக்கியம். பெரும்பாலும் இலக்கியங்களின் தோற்றத்திற்குச் சமூக உந்துதல்களே காரணமாக இருக்கின்றன. அத்தகைய பின்புலத்திலேயேதான் பக்தி

இலக்கியங்களும் தோன்றின. பக்தி இலக்கியத்தின் தோற்றங்களுக்குப் பின்னணியில் வர்க்க முரண்கள் செயல்பட்டதாகத் தோதாத்ரி குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது.

**"பக்திமார்க்க காலக்கட்டம் நாயன்மார்களும், ஆழ்வார்களும், சமண பௌத்த மதங்களைக் கடுமையாக விமர்சனம் செய்ததற்குக் காரணம் வைதீகச் சமயத்தின் எழுச்சி என்றும், பிராமணீயச் செயல்பாடு என்றும் கூறுப்படுகிறது. இது மேற்போக்கான காரணம் மட்டுமே ஆகும்............... நிலவுடைமை அமைப்பில் நகரவாசிகளுக்கும், கிராமவாசிகளுக்கும் ஏற்பட்ட மோதலின் வடிகாலாகப் பக்தி மார்க்கம் விளங்கியது.......................விவசாயப் பெருங்குடியினருக்குப் பக்திமார்க்கம் ஒரு கருத்தியலாக விளங்கியது எனலாம். அதன் நடைமுறை, தத்துவம் ஆகியன பலதரப்பட்ட மக்களுக்கு ஒரு வடிகாலாக அமைந்தது எனலாம்"(எஸ்.தோதாத்ரி, வைணவம் மார்க்சியப் பார்வை, பக்.80-81).**

சைவம் மற்றும் வைணவம் தங்களுக்குப் பொது எதிரியாக சமண, பௌத்தத்தைக் கண்டன. பிற சமயத்தினின்று சைவமும் வைணவமும் தங்களுக்குள் மக்களை மீட்டுத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கையின் வெளிப்பாடுதான் இவ்இலக்கியங்கள் எனின் மிகையாகாது. இதற்குப் பக்தியை மையமாகக் கொண்ட இலக்கியங்களை ஆழ்வார்களும் நாயன்மார்களும் படைத்தனர். வாழ்வியல்,சமயம், மொழி, இலக்கியம், எனப் பல நிலைகளில் இவர்களின் பணியும் பங்கும் குறிப்பிடத்தக்கதாகும். சமயங்களுக்கு இடையே சிந்தனைப் பெயர்வும் நடைபெற்றன. வைதீகச் சமயங்கள் புறச்சமயத்தாரின் கொள்கையான வீடுபேற்றினை நான்காவது அறமாக வரித்துக்கொண்டது. புறச்சமயப் பூசல்களினூடே வளர்ந்த பக்தி இயக்கம் சமண, சமயத்தின் வீழ்ச்சிக்குப்பின் இச்சமயங்கள் தாம் சார்ந்த சமயக் கொள்கைகளை முன்னிறுத்தி தங்களுக்குள் சமய மோதல்களை மறைமுகமாக நடத்தின. இதன் தொடர்ச்சியில் திருஞானசம்பந்தர் பரசமயக்கோளரி என்றும் திருமங்கையாழ்வார் பரகாலன் என்றழைக்கப்படுவதையும் காணலாம்.

அதேவேளையில் பக்தி இயக்கக் காலக்கட்டத்தின் தொடக்கக் காலக்கட்டத்தினைச் சார்ந்த காரைக்காலம்மையார், திருமூலர், பொய்கைஆழ்வார், பேயாழ்வார் ஆகியோர் சிவன், திருமால் இருவரையும் சிறப்பித்துப் போற்றினர். இருவரையும் ஓர் உருவாய் ஒன்றாய்க் கண்டனர். வைதீகச் சமயங்களை ஒன்றிணைக்கும் முயற்சியாக இதைக் காணலாம். சமயப் பொதுமை கொண்ட அரசியல் சூழல் நிலவியதும் இப்பொதுமை நோக்கிற்கு ஒரு காரணமாகும்.

**"சாதவாகனப் பேரரசில் செயல்பட்ட முற்காலப் பல்லவர்கள் தனிப்பட்ட ஆட்சியைக் காஞ்சி மாநகரைத் தலைநகராகக் கொண்டு தோற்றுவித்தபோது தமது சமயக்கருத்துக்களைத் தமிழ்மக்களின் சமயஉணர்வுகளைப் புண்படுத்தாதவாறு செயல்படுத்தித் தம்முடைய ஆட்சியினை வலுப்படுத்திக் கொண்டனரெனலாம். மேலும் சமயச் சார்பற்ற ஒரு அரசினைத் தோற்றுவித்த அவர்கள் மறைமுகமாகவே தமது குடிமக்களையும் சமய வேறுபாடுகள் கருதாது இணக்கக் கோட்பாட்டினைச் செயல்படுத்த வழி செய்திருக்க வேண்டும் இவ்வடிப்படைதான் முதலாழ்வார்களும் சமயச் சார்பற்ற அரசினைச் சாதகமாக்கிக்கொண்டு சமயப் பொறையுணர்வினடிப்படையில் தமது சமயமாகிய வைணவத்தை வலுப்படுத்த வகை செய்திருக்க வேண்டும். தொடர்ந்து நோக்கினால் மன்னர்கள் வைணவப் பிரிவினராயிருப்பினும் தமது சமயத்தைப் பிறர் மீது சுமத்தாது செயல்பட்டதைப் போன்றே முதலாழ்வார்களும் "கோன் எவ்வழி குடிகள் அவ்வழி" என்ற அடிப்படையில் தனது சுயநலநோக்கிற்காகச் செயல்படாமல் சமயப் பொறைமையைப் பின்பற்றியிருக்க வேண்டும்"(வி.ஆ.வசந்தா, ஆழ்வார்கள் காலத்திய சமயநிலை, பக்.191-192).**

வைணவம் மட்டுமின்றிச் சைவத்திலும் வலிமைமிக்க ஓர் அரசு உருவாகும் வரை தனிப்பட்ட சமயங்கள் தத்தம் விருப்பம்போல் செயல்பட்டுத் தமது செல்வாக்கை நிலைநிறுத்திக்கொண்டன. இதன் விளைவாகவும் சமண, பௌத்த எதிர்ப்பும் இவர்களிடத்துத் தென்படவில்லை என எண்ணத் தோன்றுகிறது.

சைவ அடியவர்களின் சமயப்பொதுமை

காரைக்காலம்மையார், திருமூலர் இருவரும் முதலாம் காலக்கட்டத்தைச் சார்ந்த சைவ அடியவர்கள். சைவ பக்தி இலக்கியத்தில் மிகப்பெருந்தடத்தை உருவாக்கியவர்கள்.

திருமூலர்

சைவ மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர். சமயப் பேரியக்கமாக, சைவ சித்தாந்தத்தின் முன்னோடியாய்த் திகழ்ந்தவர். தேவார மூவர்க்கும் முன்னவராய், வேத நெறிகளை மறுத்து சமரசம் கண்டவர். இவர்ப் புறச்சமய எதிர்ப்பில் நேரிடையாகப் பங்குபெறவில்லை. சமய வேற்றுமைக்கு இடங்கொடுக்கவில்லை.

கடவுளின் தன்மையையும் அவர்தம் செயல்பாட்டையும் விவரித்தாரேயன்றிச் சமயக் காழ்ப்பு கொண்டு திகழவில்லை. இறைவனை அன்பு நெறியில் கண்ட இவர் ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ எனத் தமிழ்ச் சமூகத்திற்கான புது நெறிகாட்டியவர். அதில் ஒரு கூறாகச் சிவனையும் திருமாலையும் ஒன்றிணைத்துக் காணும் பொதுமை நோக்கைப் பின்வரும் பாடல்கள் உணர்த்துகின்றன.

**"ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்**
**ஆதிக் கமலத் தலர்மிசை யானுஞ்**
**சோதிக்கில் மூன்றுந் தொடர்ச்சியில் ஒன்றெனார்**
**பேதித் துலகம் பிணங்குகின்றார்களே"(திருமூலர், திருமந்திரம்,பா.104).**

அரனும், அழகிய நீலமணி போலும் அரியும், உலகப் படைப்புக்குக் காரணனாகிய அயனும் என்று சொல்லப்படும் மூவரும் தொழில் பற்றி முறையே முப்பெயர்ப் பெற்றனர். அஃதல்லாது பொருளால் மூவரல்லர். இக் கருத்தமையத் தொடர்பினால் ஒன்றே முழுமுதல் என்று கூறாது, வேறு வேறு உலகோர் மாறுபடக் கூறித் தம்முள் பிணங்கி மயங்குகின்றார்கள்.

**"பயன் அறிந்து அவ்வழி எண்ணும் அளவில்**
**அயனொடு மால்நமக்கு அன்னியம் இல்லை**
**நயனங்கள் மூன்றுடை நந்தி தமராம்**
**வயனம் பெறுவீர் அவ் வானவ ராலே" (திருமூலர், திருமந்திரம்,பா.107).**

மேலோதிய முறையின் உண்மைப் பயனை அறிந்து எண்ணுமிடத்து, அயனுடன் மாலும் நாம் தொழும் தன்மையரேயன்றி நமக்கு வேறானவராகார்.

**"சோதித்த பேரொளி மூன்றைந் தெனநின்ற**
**ஆதிக்கண் ஆவ தறிகிலர் ஆதர்கள்**
**நீதிக்கண் ஈசன் நெடுமால் அயன்என்று**
**பேதித் தவரைப் பிதற்றுகின் றாரே" (திருமூலர், திருமந்திரம்,பா.110).**

அரன், அரி, அயன் என்னும் இவர்தம் நிலைகளாம். இவ் வேறுபாடுகள் அனைத்தும் நிலைவேறுபாடுகளே யன்றித் தலைமைப் பொருள் வேறுபாடுகளில்லை. இவ்வுண்மையினை உண்மையறிவில்லாத சில மூடர்கள் அறியார். முறைமைக்கண் ஒரு பொருளையே ஆண்டான், நெடுமால், அயன் என்று வேறுபடுத்திக் கூறுகின்றனர். அதற்கு மாறாக வெவ்வேறுளவென்று கூறுவது உண்மைக்கு மாறாகிய பிதற்றுரையே யன்றிப் பிறிதன்று.

இப்பாடல்கள் அனைத்திலும் ஓர் இறைக் கோட்பாடு முன்னிறுத்தப்படுகின்றது. எல்லாப் பொருளிலும் நிறைந்திருப்பவன் இறைவன் என்ற கருத்தின் வெளிப்பாடே இவர் பாடல்கள். இவரை அடுத்த வந்த சித்தர்களின் பாடல்களிலும் இவரின் இக்கருத்தொற்றுமை தென்படுகிறது.

**"ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு" (பட்டினத்தார்,பா.24).**
**"அங்குமிங்கு மாகிநின்ற ஆதிமூர்த்தி ஒன்றலோ" (சிவவாக்கியார்,பா.133).**

காரைக்காலம்மையார்

முதல் சைவப் பெண் அடியவர். இம்மைக்குரிய இன்பம் தவிர்த்து மறுமைக்குரிய இன்பம் வேண்டி நின்றவர். இறைவனாலேயே அம்மையே என்றழைக்கப்பட்ட இவர், தமிழ் நிலப்பகுதியைத் தாண்டி திராவிட நிலப்பகுதியில் புகழ்பெற்ற சைவ அடியவராய்த் திகழ்கின்றார். பெண்கள் துறவு மேற்கொள்ள இயலாது. பெண்கள் வீடுபேற்றிற்குத் தடை என்பதைத் தாண்டி சமயத்தில் பெண்ணுரிமையை முன்னிறுத்தி தம் கருத்தியலை எடுத்துரைத்தவர்.

**'காரைக்காலம்மையாரின் பக்தி நெறி சிவபெருமானுடன் ஒன்றிணையும் முறையாகும். பெண்தன்மையைத் துறந்து பால்வேறுபாடு கடந்து தன்னையே இறையோடு இணைக்கிறார். மற்ற பக்த அடியவர்களிடத்திருந்து மாறுபட்டும் விளங்குகின்றார்' (Bhakti, and Saranagati in “Siva’s Demon Devotee” Thallam Sarada, University of Wisconsin –Madison,p.2).**

இவர் சைவ பக்திமைக்கு மட்டும் முன்னோடியன்று பல புதிய இலக்கிய வகைமைக்கும் முன்னோடியாய்த் திகழ்ந்தார். பக்திமை நெறியில் சிவனையும் திருமாலையும் ஒருங்கே கண்டுள்ளதில் முதலாவதாக,

**"அரனென்கோ நான்முகன் என்கோ அரிய**
**பரனென்கோ பண்புணர மாட்டேன் - முரண் அழியத்**
**தானவனைப் பாதத் தனிவிரலாற் செற்றானை**
**யானவனை எம்மானை இன்று" (காரைக்காலம்மையார், அற்புதத்திருவந்தாதி, பா.18).**

அரக்கனாகிய இராவணனை அடக்கியவனான இறைவனை அரன் என்ற பெயரால் போற்றுவேனோ, நான்முகன் என்ற பெயரால் போற்றுவேனா, இங்ஙனம் உலகங்களைக் குறித்தகால எல்லைவரை நிலைபெறச் செய்து காக்குங் தொழில் பூண்டு அலைகடல் நடுவிலே அறிதுயிலமர்த் திருவுடமை அரியென்னும் பெயருடையபரனென்று போற்றுவேனோ.

**"ஒருபால் உலகளந்த மாலவனாம்; மற்றை**
**ஒருபால் உமையவளாம் என்றால் - இருபாலும்**
**நின்னுருவ மாக நிறந்தெரிய மாட்டோமால்**
**நின்னுருவோமின்னுருவோநேர்ந்து."காரைக்காலம்மையார், அற்புதத்திருவந்தாதி,** பா.41).

இங்கே உலகளந்த மாலவனையும் உமையவளையும் அரனின் திருவுருவத்தில் பிரிக்க முடியாத அளவிற்குக் காண்கிறார்.

**"அங்கண் முழுமதியஞ் செக்கர் அகல்வானத்**
**தெங்கும் இனிதெழுந்தால் ஒவ்வாதே - செங்கண்**
**திருமாலைப் பங்குடையான் செஞ்சடைமேல் வைத்த**
**சிரமாலைத் தோன்றுவதோர் சீர்" (காரைக்காலம்மையார், அற்புதத்திருவந்தாதி,** பா.52).

சிவனும் திருமாலும் ஓருருவாய்க் கொண்டு இலங்கும் தோற்றம் செவ்வானத்தில் தோன்றும் முழுமதியம் எனப் போற்றுகின்றார்.

**"காருருவக் கண்டத்தெங் கண்ணுதலே எங்கொளித்தாய்**
**ஓருருவாய் நின்னோடு உழிதருவான் - நீருருவ**
**மேகத்தாற் செய்தனைய மேனியான் நின்னுடைய**
**பாகத்தான் காணாமே பண்டு" (காரைக்காலம்மையார், அற்புதத்திருவந்தாதி,** பா.54).

திருமால் நின்னுடைய பாகத்தானாய் நின்னோடு ஓருருவாய் இருந்தபோதிலும், பண்டொருகால் அவன் காணாதபடி நீ எங்கு சென்று ஒளித்தாய் ?

**"பண்புணர மாட்டேன்நான் நீயே பணித்துக்காண்**
**கண்புணரும் நெற்றிக் கறைக்கண்டா - பெண்புணரும்**
**அவ்வுருவோ மாலுருவோ ஆனேற்றாய் நீறணிவ**
**தெவ்வுருவோ நின்னுருவம் மேல்"(காரைக்காலம்மையார், அற்புதத்திருவந்தாதி,** பா.59).

நின் திருமேனியின் மேல் திருநீற்றினை அணிந்து கொள்வது பெண்ணுரு பாகமாகிய இடப்பாகத்திருவுருமோ, அன்றித் திருமால் பொருந்திய வலப்பாகத் திருவுருமோ என இறைவனின் இயல்பினை உணர இயலவில்லை எனப் பாடுகின்றார்.

**"மின்போலுஞ் செஞ்சடையான் மாலோடும் ஈண்டிசைந்தால்**
**என்போலுங் காண்பார்கட் கென்றிரேல் - தன்போலும்**
**பொற்குன்றும் நீல மணிக்குன்றுந் தாமுடனே**
**நிற்கின்ற போலும் நெடிது"(காரைக்காலம்மையார், அற்புதத்திருவந்தாதி,** பா.83).

இறைவனும் திருமாலும் ஒருங்கு திகழுந்தோற்றம் பொன்மாலையும் நீலமலையும் ஒருங்கிணைந்த தோற்றத்தை ஒக்கும் என்கிறார்.

**"இறைவனிடம் முழு அன்பு செலுத்துதல், தன்னை முழுவதுமாக அவனிடம் அர்ப்பணித்தல், இருவினையைப் போக்க முயலுதல், பிறப்பை அறுக்க முயலுதல், இறைவன் தன் உள்ளத்திலேயே உறைவதை உணர்தல், இவற்றால் அவலம் நீங்குதல் என்பவை அம்மையார் சைவ சமய வளர்ச்சிக்குத் தந்த கொடைகளாம். இவருக்கு முன் இக்கருத்துக்களை இவ்வளவு அழுத்தமாகக் கூறும் நூல்களைக் கண்டதில்லை"** (பெரியபுராணம் - ஓர் ஆய்வு, ப. 119).

இறைவனின் திருவுருவச்சிறப்பில் சிவனும், திருமாலும் ஓருருவாய்த் திகழ்வதாகக் கூறுகின்றார்.சைவ எழுச்சியில் இவர் தடம் கண்டவர் எனப் போற்றப்பட்டாலும் திருமாலையும், சிவனையும் ஒருவராய், ஒத்த பண்பினராய்க் காணும் மரபு இவர் பாடல்களில் புலனாகின்றது. இறைவன் ஒருவனே அவனை எவ்வாறு வழிபடுகின்றோமோ அவ்வாறு அவன் நம்மிடத்துத் தோன்றுவான் என்ற பக்திமை நெறியை இவ்விருவரும் முன்வைக்கின்றனர். இருப்பினும் இவர் பிறச் சமயக் காழ்ப்பைத் தன் இலக்கியங்களில் முன்வைக்கவில்லை. புறச்சமயத்திற்கு மாற்றாக எழுந்த சைவ, வைணவ சமயங்களை ஒன்றிணைத்துக் காண்பது இவரின் தனித்துவமான சமயப்பொறையாகும். சைவ எழுச்சியில் பின் வந்த நாயன்மார்கள் பலருக்கும் முன்னோடியான இவர் மறைமுகமான ஒரு தத்துவப் போராட்டத்தையும் முன்வைத்தார்.

**ஆழ்வார் பாடல்களில் சமயப்பொதுமை**

**பொய்கையாழ்வார்**

ஆழ்வார்கள் பன்னிருவரில் காலத்தால் முற்பட்டவர். திருமாலுக்குரிய பாஞ்சன்னியம் என்ற சங்கின் அம்சமாக இவர் போற்றப்படுகின்றார். முதல் திருவந்தாதியைப் பாடியவர்.அணிநலம் சிறக்கப் பாடியவர் இவர்.

**"அரன் நாரணன் நாமம் ஆன்விடை புள் ஊர்தி**
**உரை நூல் மறை உறையும் கோயில் வரை நீர்**
**கருமம் அழிப்பு அளிப்பு கையது வேல் நேமி**
**உருவம் எரி கார் மேனி ஒன்று" (பொய்கை ஆழ்வார், முதல் திருவந்தாதி,பா.85).**

இறைவனின் திருப்பெயர் அரன்(-சிவன்), நாரணன் (- திருமால்). அவன் வாகனம் காளை, கருடன்; மக்கள் உய்யும் பொருட்டுக் வெளிப்படுத்திய நூல்கள் ஆகமம், வேதம். மலையும் பாற்கடலும் இறைவனின் இருப்பிடம். அழித்தல், அளித்தல் அவன் தொழில். தீயோரைத் திருத்துதற்கு ஏந்திய படைக்கலன் மூவிலைவேல் (-சூலம்), சக்கரம். அவன் நிறம் சிவப்பும் கறுப்பும்.

**"ஏற்றான் புள் ஊர்ந்தான் எயில் எரித்தான் மார்வு இடந்தான்**
**நீற்றான் நிழல் மணி வண்ணத்தான் கூற்று ஒருபால்**
**மங்கையான் பூமகளான் வார்ச் சடையான் நீள் முடியான்**
**கங்கையான் நீள் கழலான் காப்பு" (பொய்கை ஆழ்வார், முதல் திருவந்தாதி பா.54).**

சிவன், மால் இருவரின் ஊர்திகள் முதலில் சுட்டப்பட்டன. பின் முப்புரம் எரித்தமை, இரணியன் மார்பிடந்தமை என்னும் வீரச் செயல்கள் கூறப்பட்டன. பின்னர், இருவரின் திருமேனி அழகு இடம் பெற்றது. நீறுபூசியவன் ஒருவன். நீலமணி வண்ணன் ஒருவன். உடம்பின் ஒரு பகுதியில் மலைமங்கையினை உடையன் முன்னவன். பின்னவன் மலர்மகளை உடையவன். முன்னவன் நெடுஞ்சடையன்; பின்னவன் நீள்முடியன். ஒருவன் கங்கையான்; இன்னொருவன் கழலணிந்தவன். உயிர், உலகு அனைத்தையும் காவல் பூண்ட இறைவன் இருவகையாக இலங்கினும் ஒருவரே.

**"பொன் திகழும் மேனிப் புரி சடை அம் புண்ணியனும்**
**நின்று உலகம் தாய நெடுமாலும் என்றும்**
**இருவர் அங்கத்தால் திரிவரேலும் ஒருவன்**
**ஒருவன் அங்கத்து என்றும் உளன்" (பொய்கை ஆழ்வார், முதல் திருவந்தாதி, பா.2178).**

பொன்போல விளங்குகின்ற உடலையும் பின்னினச் சடைமுடியையும்உடையவனாகிய ருத்ரன் நின்று உலகத்தை அளந்தவனும் இருவரும் வேறு வடிவத்தைக் கொண்டு இருந்தார்களேயானாலும் ஒருவர் உடலில் ஒருவர் எப்போதும் இடம்பெற்றிருப்பர்.

**பேயாழ்வார்**

திருமயிலையில் பிறந்த இவர் திருமாலின் வாளின் அம்சமாகக் கருதப்படுகின்றார். மூன்றாம் திருவந்தாதியைப்பாடிப் பரவியவர். திருமாலின் பல தலங்களையும், அவரின் திருஅற்புதங்களையும் விரிவாகப் பாடியுள்ளார். இறைவன் எல்லா உருவங்களிலும் வெளிப்படுபவன் என இறைவனை எளியவனாகச் சித்தரித்தவர். இவர் பாடல்கள் கற்பனை வளம் மிக்கவை.

**"தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்**

**சூழ்அரவும் பொன்னாணும் தோன்றுமால் - சூழும்**
**திரண்டுஅருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு**
**இரண்டு உருவும்ஒன்றாய் இசைந்து" (பேயாழ்வார், மூன்றாம் திருவந்தாதி,**பா.63).

எல்லாம் தானே ஆன இறைவன் திருமால் தானே தனக்கு உவமையானவன்; எல்லாத் தெய்வ உருவங்களிலும் வெளிப்படுபவனும், தவ உருவும், விண்ணில் மின்னும் விண்மீன்களும், தீயும், பெரிய மலைகளும், எட்டுத்திசைகளும், சூரியனும் சந்திரனும் ஆகிய இருசுடர்களும் அவனே எனப் பாடுகிறார். சங்கர நாராயணனாகக் காண்கின்றார்.

முதல்காலக்கட்டத்தைச் சார்ந்தவர்கள் காரைக்காலம்மையார், திருமூலர், பொய்கையாழ்வார், பேயாழ்வார். சமணம், பௌத்தம் இரண்டும் பெருவழக்கான சமயங்களாக மக்களிடத்து இருந்த காலக்கட்டம். அரசியல், சமூகச் சூழலிலும் செல்வாக்குப் பெற்ற சமயங்களாகத் திகழ்ந்தன. "அவரவர்த் தாந்தம் அறிந்த வாறேத்தி இவரி வரெம் பெருமானென்று" அன்றைய சமய நிலையைக் காட்டும். மக்கள் தம்தம் விருப்பத்திற்கேற்ப சமயங்களைப் பின்பற்றினர். அக்காலக்கட்டத்தில் பின்பற்றப்பட்ட பிற சமயத்தை மதிக்கவும் ஏற்கவும் இவர்கள் தலைப்பட்டனர். தங்களின் கருத்தியலுக்கு மாற்றான புறச்சமயங்களான சமண, பௌத்தத்தை எதிர்க்காமல் தங்கள் கருத்தியலை முன்வைத்தனர். சமயப்பொறையோடு திகழ்ந்தனர். குறிப்பாகச் சமண, பௌத்த எதிர்ப்பும் சமயச்சாடலும் இவர்களிடம் காணப்படவில்லை. இதற்கு மாற்றாகச் சைவ, வைணவ உயர்வையும் சிறப்பையும் எடுத்துக்காட்டினர். சிவனில் திருமாலையும் திருமாலிடத்து சிவனையும் ஒருங்கே கண்டனர். பக்தி பேரியக்க வரலாற்றில் தத்தம் சார்ந்த சமயக்கொள்கை சார்ந்தே இறைவனை அணுகினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதேவேளையில் இவர்களுக்கு அடுத்த காலக்கட்டதில் தோன்றிய பிற ஆழ்வார்கள், நாயன்மார்கள் பாடல்களில் சிவன், திருமால் இருவரையும் ஒருங்கே காணும் பண்பு வெளிப்படாமல் இல்லை. இருப்பினும் அப்பாடல்களில் தாங்கள் சார்ந்த இறையை முதன்மைப்படுத்தியே தங்கள் பாடல்களைப் புனைந்தனர். தம் இறைநெறியும், கோட்பாடுகளுமே இறுதியில் வலியுறுத்தப்பட்டது.

**"மாதொரு பாலும் மாலொருபாலும் மகிழ்கின்ற நாதன்"**
என்று ஞானசம்பந்தரும்
**"மாலோர்ப் பாகம் திகழ்ந்தான்"**
**"ஒருவனாய் உலகத்தே நின்ற நாளோ**
**ஓருருவே மூவுருவாய் ஆன நாளோ"**
என்று நாவுக்கரசரும்
**"இடம் மால் வலம் தான் இடப்பால் துழாய் வலப்பால் ஒண்கொன்றை**
**வடமாலிடம் துகில் தோல் வலம் ஆழி இடம் வலம் மான்**
**இடமால் கரிதால் வலம் சேது இவனுக்கெழில் நலம் சேர்**
**குடமால் இடம் வலம் கொக்கரையாம் எங்கள் கூத்தனுக்கு"**
எனச் சேரமான் பெருமாள் நாயனாரும்
**"முனியே நான்முகனே! முக்கண்ணப்பா! என் பொல்லாக்**
**கனிவாய்த் தாமரைக் கண் கரு மாணிக்கமே! என் கள்வா!"**
நம்மாழ்வாரும் பாடியிருப்பமை நோக்கத்தக்கது.

**பக்தி இலக்கியத்தில் புறச்சமய எதிர்ப்பு**

> **"தமிழ்நாட்டுப் பக்தி இயக்கம் என்பது சைவ, வைணவ மதங்களின் எழுச்சி மட்டுமன்று. அது சமண, பௌத்த மதங்களுக்கு எதிரான கலகக்குரலும் ஆகும். இதன் விளைவாகப் பௌத்தம் தமிழ்நாட்டில் வேரற்றுப் போயின. சமணமும் பௌத்தமும் வெறுத்தற்குரிய மதங்களாகச் சைவ வைணவர்களால் கருதப்பட்டன. வெறுப்பிணர்வின் எச்சங்கள், தமிழரிடையே இன்னும் வசைச்சொற்களாக வழங்கிவருகின்றன"(தொ.பரமசிவன், தமிழர் உறவு முறைகளும் சமயமும் வழிபாடும், ப.22).**

பக்தி இலக்கியத்தின் முதல்காலக்கட்டத்தினர்ப் புறச்சமயக் காழ்ப்பின்றிச் செயல்பட்ட நிலையைப் பின்வந்த பக்தி இயக்கத்தினர் முற்றிலுமாக மாற்றினர்.சமயப்போராட்டத்தினின்று தம் சமயநிலையை வலுப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் தாங்கள் இருப்பதாக உணர்ந்ததின் விளைவே பிற சமய மறுப்பும், எதிர்ப்பும். கி.பி.6ஆம் நூற்றாண்டிற்குப் பின் ஏற்பட்ட சமயமாற்றங்களைப் பின்வந்தோர் பாடல்களில் காணமுடிகின்றது. புறச்சமய

எதிர்ப்பையும் தமது மேலாண்மையையும் வெளிப்படையாக முன்வைத்ததோடு, தாங்கள் சார்ந்த சமயத்தைத் தனிப்பெருந்தெய்வமாகக் கண்டனர். சமயச்சடங்குகள், தனித்தன்மைகள், இறைவனின் குணவியல்புகள் போன்றவற்றைத் தம்பாடல்களில் வலியுறுத்தினர். திருவிளையாடல்கள், அவதாரங்கள் பற்றிய கருத்துக்களை முன்வைத்தனர். பிற சமயத்தைச் சிறுமை செய்து அதன் வாயிலாகத் தம்சமயத்தை வலுப்படுத்தினர். இதற்கு அன்றைய அரசியல் சூழலும் அவர்களுக்குச் சாதகமாய் இருந்தது. நின்ற சீர் நெடுமாறன் உதவியோடு ஞானசம்பந்தர் சமணர்களைக் கழுவேற்றம் செய்ததாகக் கூறப்பட்ட வரலாறும், மகேந்திர வர்ம பல்லவன் சமணத்திலிருந்து சைவமதத்தைச் சார்ந்ததும் இதன் பின்னணியில் அமைந்ததே.

**"மத்த யானையின் ஈருரி மூடிய**
**அத்த னேயணி ஆலவா யாப்பணி**
**பொய்த்த வன்தவ வேடத்த ராஞ்சமண்**
**சித்திரை யழிக் கத்திரு வுள்ளமே"(ஞானசம்பந்தர். பா.298-2).**

மதம் பொருந்திய யானையின் தோலை உரித்துப் போர்த்திய அத்தனே! அழகிய ஆலவாயில் விளங்கும் நாதனே! பொய்த்தவ வேடம் கொண்ட சமணரிடம் வாது செய்து அழிப்பதற்குத் திருவுள்ளம் யாதோ? உரைப்பாயாக.

**"கையி லுண்டுழல் வாருங் கமழ்துவ ராடையான்**
**மெய்யைப் போர்த்துழல் வாரு முரைப்பன மெய்யல**
**மைகொள் கண்டத்தெண்டோண்முக்க ணான்கழல்**
**வாழ்த்தவே ஐயந் தேர்ந்தளிப் பானுமை யாறுடை யையனே".(ஞானசம்பந்தர். பா.1534).**

கையில் உணவை வாங்கி உண்டு உழலும் சமணரும், நாற்றம் அடிக்கும் துவராடையால் உடலைப் போர்த்துத் திரியும் புத்தரும் கூறும் உரைகள் மெய்யல்ல என்பதை அறிந்து, நீலகண்டமும் எண் தோளும் மூன்று கண்களும் உடைய சிவனே பரம்பொருள் எனத் தேர்ந்து அவர்த் திருவடி வாழ்த்த, ஐயந்தேரும் ஐயாறுடைய ஐயன் நம்மைக் காத்தருளுவான்

**"வெறுப்பொடு சமணர் முண்டர்விதியில்சாக் கியர்கள் நின்பால்**
**பொறுப்பரி யனகள் பேசில் போவதே நோயதாகிக்**
**குறிப்பெனக் கடையுமாகில் கூடுமேல் தலையை யாங்கே**
**அறுப்பதே கருமங் கண்டா யரங்கமா நகருளானே! "**
**(தொண்டரடிப் பொடியாழ்வார்,பா.8).**

வெறுப்போடு கூடிய சமணர் சைவர்களும் பௌத்தர்களும் நின்பால் பொறுக்கமுடியாத சில வார்த்தைகளைப் பேசில் சொல்லுவார்களாகில் அதுவே நோய் ஆகிமுடிந்து போவது எனக்கு சக்தியும் கூடுமாகில் ஆங்கே உன்னை நிந்தித்த அவ்விடத்திலேயே தலையை அறுப்பதே செய்யத் தக்கது காண்

**"புலையற மாகி நின்ற புத்தொடு சமண மெல்லாம்,**
**கலையறக் கற்ற மாந்தர்க் காண்பரோகேட்ப ரோதாம்,**
**தலையறுப் புண்டும் சாவேன் சத்தியங் காண்மின் ஐயா,**
**சிலையினா லிலங்கை செற்ற தேவனே தேவ னாவான். "**
**(தொண்டரடிப் பொடியாழ்வார்,பா.878).**

சாத்திரங்களை நன்றாக ஓதின மனிதர் நீசத் தர்மமாய்நின்ற பௌத்த மதம், சமண மதம் முதலிய எல்லா மதங்களையம் நெஞ்சாலே தான் ஆராய்வார்களோ? காது கொடுத்துத்தான் கேட்பார்களோ?

**"அறியார் சமணர் அயத்தார் புத்தர்**
**சிறியார் சிவப்பட்டார் செப்பில் – வெறியாய**
**மாயவனை மாலவனை மாதவனை ஏத்தாதார்**
**ஈனவரே ஆதலால் இன்று" (திருமழிசை ஆழ்வார்,பா.6).**

சமணர், பௌத்தர், சிவனை வழிபடுபவர்களை அறியாதார் என்றும் சிறியர் என்றும் இகழ்வதோடு திருமாலை வணங்காதார் ஈனவர் என்கிறார். மேலும் மறந்தும் புறந்தொழா மாந்தர் என்று தன்னைக் கூறிக்கொள்கின்றார்.

இப்பாடல்கள் புறச்சமய எதிர்ப்பின் எல்லையைக் காட்டும். அன்றைய சமயச் சூழலையும் விளக்கிக் காட்டுகின்றது.சமயப்பொறை இல்லாத மதப்போர் நடந்த காலத்தில் வாழ்ந்திருந்த பக்தி அடியவர்களின்

கருத்தாக இதை நோக்கலாம். தாங்கள் சார்ந்த சமயத்தை முன்னிலைப்படுத்துவதோடு புறச்சமயச் சாடலும் அதிகமாய் இருந்தது.சைவம், வைணவம் என்ற மதங்கள் மக்களிடத்து வலுப்பெற்ற காலக்கட்டத்தில், பெருவழக்காக வழிபடப்பட்ட நிலையில் பிற சமய எதிர்ப்பை முன்வைத்தனர்.

**தொகுப்புரை**

- **இனக்குழுச் சமூகத்தில் இயற்கையே தெய்வமாக வழிபடப்பட்டது.**
- **பழந்தமிழரின் இறைநெறி கோட்பாட்டை விளக்கும் ஆவணமாக இலக்கியங்கள் திகழ்கின்றன.**
- **திணை தெய்வ மரபிற்கு மாறாகப் பெருஞ்சமயங்கள் உருவெடுத்தன.**
- **புதிய அரசியல் சூழலில் அரசியல் மாற்றத்தோடு சமூக மாற்றத்தின் ஒரு கூறாக வேற்றுச் சமயங்கள் மக்களின் ஆதரவைப்பெற்ற சமயங்களாக மாறின.**
- **சமண, பௌத்த சமயங்கள் சங்க காலத்தினின்று இருப்பினும் களப்பிரர்க் காலத்தில் அது பெருஞ்சமய நிலையை எட்டியது.**
- **மனிதர்கள் அவர்கள் உருவாக்கிய சமயங்கள் அவைகளுக்கிடையான போராட்டத்தின் விளைவாக, சமயப்பூசலின் விளைவாகப் பக்தி இலக்கியம் உருப்பெற்றது.**
- **சமண, பௌத்த சமயங்களுக்கு மாற்றாகச் சைவ, வைணவ சமயங்களை முன்வைத்தனர்.**
- **இலக்கியத்தைத் தங்களின் சமயப்பரப்பலுக்காகவும், தத்துவார்ந்த சிந்தனை வெளிப்பாட்டிற்குமான வாயிலாகப் பயன்படுத்தினர்.**
- **சமயப்போராட்டத்தின் காரணமாக இலக்கியத்தின் பாடுபொருளில் இறைவன் நிகழ்த்திய அற்புதங்கள் வலியுறுத்தப்பட்டன.**
- **தொடக்கக் காலத்தில் சமண, பௌத்தத்தினை எதிர்த்த பக்தி இயக்கத்தினர்ப் பாரம்பரிய சமயமாகக் கொண்ட சைவ, வைணவத்திடையே வேறுபாடு கொள்ளவில்லை.**
- **சமயப் பொதுமைத் தன்மையோடு தங்கள் பாடல்களைப் முதலாம் காலக்கட்டம் சார்ந்த ஆழ்வார், நாயன்மார்கள் புனைந்தனர்.**
- **இவர்களின் அடிப்படைக் கோட்பாடு என்பது சிவன், திருமால் ஓர் உருவாய்த்திகழ்கின்றான் என்பதே.**
- **பிற்கால நாயன்மார்கள் ஆழ்வார்களிடத்தே சமய எதிர்ப்பும், கண்டனமும் வெளிப்படையாகவே இருந்தது. சமயப்பூசலின் காலக்கட்டப்பின்னணியின் தொடர்ச்சியாக இதைக் காணல் வேண்டும். சைவ, வைணவ ஒருங்கிணைப்பையும் முன்வைக்கவில்லை.**

**References:**


1. Gnanasambanthan ,A.S. 1999.Periyapuranam – Oor Aaivu.Chennai:Gangai Publications
2. Kandhaswamy,S.N.2004. Ulakat Tamil Ilakkiya Varalaru.Chennai:International Institute of Tamil Studies
3. Paramasivan,Tho.2001. Panpattu Asaivukal,Nagercoil: Kalachuvadu Publications.
4. Paramasivan,Tho.2022.Thamizhar Uravu Muraigalum Samayamum Vazhipadum. Chennai: New Century Book House.
5. Thiyagarajan,T.2017.Periya Puranam Samooga Pinnaniyum Manidha Uravugalum. Chennai: New Century Book House.
6. Thothathri,S.2010.Vainavam – Marxiya Parvai, Chennai: New Century Book House.
7. Vasantha,V.A.1990.Naalayira Dhivya Prabhandhathil – Samooha Arasiyal Nerihal, Madurai: Kumaran Publications.
8. Venkatasamy, Mylai Seeni. 2006.Samayam Vazhartha Tamil.Chennai: Naam Thamizhar
9. Murugesa Pandiyan,N.2015.Ungal Noolaham.PP.30-32.vol.09.



**Copyright (c) Author**

**This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.**
Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.